Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**DVC.No. 4/2019**

**2024-ம் ஆண்டு ஜுன் மாதம் 05-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின்**
**ம.சா. 2-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**
**திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம.சா. | - | 2 | தொழில் | - | வீட்டு குடித்தனம் |
| பெயர் | - | கலாராணி | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | சுரேஷ்ஆனந்த் | சமயம் | - | |
| கிராமம் | - | வாழைத்தோட்டம், வால்பாறை | வயது | - | 46 |
| சாதி | - | | | | |

**05.06.2024**

**(1, 3, 4 எதிர்மனுதாரர்கள் ஆஜரில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 -கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பப்பட்டது)**

**எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணை.**

1. எங்கள் குடும்பம் கிருத்துவ மதத்தை சார்ந்தவர் என்றால் முன்னாள் கிருத்துவ மதத்தை தழுவினோம் தற்போது இல்லை. எனக்கும் எனது கணவருக்கும் கிருத்துவ முறைப்படி திருமணம் நடைபெற்றது என்றால் இல்லை. நானும், எனது கணவரும் ஒருவருக்கொருவர் விரும்பி திருமணம் செய்துகொண்டோம்.

2. எனது கணவருக்கு நான் 2-வது மனைவி என்றால் சரிதான். முதல் திருமணத்தில் இருந்து சட்டப்படி விவாகரத்து பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். எனது மகள் ஷோபியா எந்த வருடம் பிறந்தார் என்றால் ஜனவரி 18, 1991. எனது மகள் ஷோபியாவின் சாதி சான்றிதழில் சோளிய வெள்ளாலர் வகுப்பை சார்ந்தவர் என உள்ளது என்றால் சரிதான்.

3. எனது மகள் ஷோபியா கிருத்துவ மதத்தில் இருந்து இந்து மதத்திற்கு முறையாக மாறினாரா என்றால் எனது மகளின் முதல் திருமணம் கிருத்துவ மதத்தை சார்ந்தவருடன் நடைபெற்றதால் அவருடன் சர்ச்சுக்கு சென்று வருவார். அவரிடம் இருந்து பிரிந்த பிறகு அவர் சர்ச்சுக்கு செல்லுவது இல்லை. இந்து முறைப்படி கோவிலுக்கு சென்று வருகிறார். அவரின் முதல் திருமணம் 20.06.2011 -ம் தேதி தயாலபிரபு என்பவருடன் CSI HOLY சர்ச் வால்பாறையில் நடைபெற்றது என்றால் சரிதான்.

4. 1-ம் எதிர்மனுதாரருடன் 04.09.2019-ம் தேதி எனது மகளுக்கு இந்து முறைப்படி திருமணம்

நடைபெற்றது என்றால் சரிதான். இந்த திருமணம் ஷோபியாவிற்கு 1-ம் எதிர்மனுதாருடன் 2-வது திருமணம் என்றால் சரிதான். முதல் திருமணத்திலிருந்து சட்டப்படி விவாகரத்து பெறவில்லை என்றால் சரியல்ல. முதல் திருமணத்தில் இருந்து எப்போது விவாகரத்து பெறப்பட்டது என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. 1-ம் எதிர்மனுதாரருக்கு எனது மகளின் முதல் திருமணத்தை மறைத்து திருமணம் செய்துவைத்தேன் என்றால் சரியல்ல. எனது மகளை பெண் பார்க்க புரோக்கர் மூலம் 1-ம் எதிர்மனுதாரர் மணிகண்டனின் அக்கா என கூறி ஜிஜிலா மேரி என்பவர் எங்களை தொடர்பு கொண்டு பெண் கேட்டபோது அவரிடம் எனது மகளுக்கு நடந்த முதல் திருமணத்தை பற்றி கூறி அவர் கடந்த 8 வருடங்களாக எங்களுடன் இருந்து வருவதையும் சொன்னோம்.

5. எனது மகளின் முதல் திருமணத்திலிருந்து விவாகரத்து பெற்ற தீர்ப்பு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு குமார் என்ற மகன் உள்ளரா என்றால் இல்லை. ம.சா.ஆ.2 திருமண பதிவு சான்றிதலில் உள்ள பெற்றோர் / காப்பாளர் கையொப்பம் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றால் சரிதான்.

6. ம.சா.ஆ.2-ல் சோலியர் வெள்ளலார் வகுப்பை சார்ந்தவர் என குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 1-ம் எதிர்மனுதாரருக்கு ரொக்கமாக ரூ.2,00,000/- 5 பவுன் நகையும் திருமணத்தின் போது கொடுத்தற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருமணத்தின் போது 1-ம் எதிர்மனுதாரருக்கு திருமண மேடையில் வைத்துதான் நகை போட்டோம்.

7. திருமணத்திற்கு பின்பு எனது மகள் 1-ம் எதிர்மனுதாரர் வீட்டில் எத்தனை நாட்கள் இருந்தார் என்றால் 20 நாட்கள் இருந்திருப்பார். எனது மகளுக்கும் 1-ம் எதிர்மனுதாரருக்கும் அவர் சேர்ந்து இருந்த 20 நாட்கள் என்ன பிரச்சனை நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் திருமணம் நடைபெற்ற 3-ம் நாள் வால்பாறையில் திருமண வரவேற்பு விழா வைத்திருந்தோம். அங்கு 1-ம் எதிர்மனுதாரரின் அக்கா ஜிஜிலாவும் அவரது தங்கை ஷோபியாவும் எனது மகளை திட்டி பிரச்சனை செய்து எங்களது வீட்டில் ஒரு நாள் கூட தங்க விடாமல் அழைத்துசென்றார்கள், அன்றிலிருந்தே எனது மகளுக்கு 1-ம் எதிர்மனுதாரர் வீட்டில் இருக்கும் பிரச்சனைகளை எனக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுப்பார்.

8.எனது மகள் ஷோபியா திருமணத்திற்கு முன்பு கருவுற்று இருந்தார் என்றால் திருமணத்திற்கு முன்பு இரண்டு மாதங்களாக திருமணம் நிச்சயக்கப்பட்ட தேதியில் ,இருந்து 1-ம் எதிர்மனுதாரர் வால்பாறை வந்து எனது மகளுடன் தனிமையில் இருந்து வந்துள்ளார். 14.09.2019-ம் தேதியே எனது மகளுக்கு வாந்தி, மயக்கம் வந்ததால்தான் அவரை 1-ம் எதிர்மனுதாரர் மருத்துவமனைக்கு அழைத்துசென்றார் என்றால் சரியல்ல. எனது மகளுக்கு தைராய்டு பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அழைத்துசென்றிருக்கிறார் அங்கு அவர் கருவூற்று இருந்தது தெரியவந்தது.
இந்த விஷயத்தை ஜிஜிலா மேரி எனக்கு தொலைபேசி மூலம் தெரிவித்து சந்தோஷப்பட்டார்கள்.

9. எனது மகளை பரிசோதனை செய்த மருத்துவர் விஜயன் என்றால் அது எனக்கு தெரியாது. எனது மகளின் மருத்துவ பரிசோதனையின் போது நான் உடன் சென்றிருந்தேன் என்றால் சரியல்ல. எனது மகள் திருமணம் ஆகி 10 நாட்களில் கர்ப்பமாக இருக்கிறார் என்ற விவரத்தை ஜிஜிலா மேரி மூலம் நான் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான்.

10. எனது மகள் ஷோபியா கருவூற்றதற்கு 1-ம் எதிர்மனுதாரர் காரணம் இல்லை என்பதை நான்

நன்கு தெரிந்துகொண்டே 1-ம் எதிர்மனுதாரருக்கு எதிராக எனது தூண்டுதலின் பேரில் ஷோபியா 1-ம் எதிர்மனுதாரர் அடித்து கொடுமை படுத்தியதாக தவறாக சொல்லி வருகிறார் என்றால் சரியல்ல.

11. 1-ம் எதிர்மனுதாரர் ஜிஜிலாமேரி மற்றும் ஷோபியா ஆகியோர்கள் திருமணத்திற்கு முன்பு கோயம்புத்தூரில் உள்ள ஜோன் டோட்டலுக்கு சென்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. ஜிஜிலா மேரி என்னிடம் சொல்லிவிட்டுதான் இதுவரையும் அழைத்துசென்றார்.

12. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் பாரா 1 முதல் 12 வரையுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் எனது மகளின் முதல் திருமணத்தை மறைத்தும் முதல் திருமணத்தில் இருந்து சட்டப்படி விவாகரத்து பெறாமலும், எனது மகள் வேறு நபர் மூலம் கருவுற்று இருப்பதை மறைத்தும் , 1-ம் எதிர்மனுதாரரையும் அவரின் குடும்பத்தையும் பழிவாங்கவேண்டும் என்று இந்த வழக்கை எதிர்மனுதாரரிடம் பணம் பறிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான சங்கதிகளை கொண்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

13.புகார் மனுவிலும் எனது நிரூபண வாக்குமூலத்திலும், 1 முதல் 12 வரையுள்ள பாராக்களில் சொல்லியுள்ளது போல எதிர்மனுதாரர்கள் வரதட்ணை கொடுமையோ, மிரட்டலோ, அடிக்கவோ நகையை பறித்துகொண்டு தரமறுக்கவோ எந்த குற்ற செயல்களையும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. தவறாக புகாரின் அடிப்படையில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்களுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.